# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

வேர்ல்டு சர்ச் ஹெட் குவாட்ரஸ், செயின்ட் தாமஸ் கம்யூனிட்டி
திருவல்லா - 689 103, கேரளா, இந்தியா.


## மேய்ப்பனின் கடிதம்

எனது அன்பிற்குரிய மேய்ப்பர்களுக்கும், பரிசுத்த திருச்சபையின் அனைத்து விசுவாசிகளுக்கும்,

நமது கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவினிடமிருந்து கிருபையும், இரக்கமும், சமாதானமும் உங்களுக்கு உண்டாவதாக!

பரிசுத்த திருச்சபையின் வாழ்வில் மற்றுமொரு திருச்சபை நாட்காட்டி ஆண்டின் நிறைவினை நாம் நெருங்கிக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில், சற்று சிந்தித்துப் பார்ப்பதற்கான ஒரு பரிசுத்தமான வாய்ப்பு நமக்கு வழங்கப்பட்டுள்ளது. நமது திருச்சபையின் பொது வாழ்வின் ஒரு முக்கிய அம்சத்தில் நாம் அனைவரும் புதுப்பித்த அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்காக, நமது திருச்சபையின் ஒவ்வொரு ஸ்தல திருச்சபைக்குப் பாதுகாப்பானதும், பரிசுத்தமானதுமான வாசஸ்தலமாக விளங்க வேண்டும் என்ற நோக்கில், ஒவ்வொரு ஸ்தல திருச்சபையையும் மற்றும் ஒவ்வொரு விசுவாசியையும் அன்புடன் அழைக்கிறேன்.

## திருச்சபை ஒரு மருத்துவமனை

பரிசுத்த திருச்சபை பிதாக்கள், திருச்சபையை பெரும்பாலும் ஒரு மருத்துவமனையாக வர்ணித்துள்ளனர். காயப்பட்ட மற்றும் உடைந்த உள்ளங்களைக் கொண்டவர்கள், பரம வைத்தியரான நமது கர்த்தரிடமிருந்து இரக்கத்தையும் சுகத்தையும் பெறுவதற்காக வரும் இடமாக திருச்சபை விளங்குகிறது. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி பரிசுத்த வேதாகமம் இவ்வாறு அழகாகக் கூறுகிறது: “*நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்.*” *(பரிசுத்த மத்தேயு 12:20)* இங்கு குறிப்பிடப்படும் நெரிந்த நாணலும், மங்கியெரிகிற திரியும், தங்களுடைய பெலன் குறைந்து கொண்டிருப்பவர்களையும், நம்பிக்கை மங்கிக் கொண்டிருப்பவர்களையும், பாவம், துன்பம் அல்லது வாழ்க்கைச் சூழ்நிலைகளால் காயப்பட்டவர்களையும் குறிக்கின்றன. ஆயினும், கிறிஸ்து அவர்களை ஒருபோதும் புறக்கணிப்பதில்லை. மாறாக, அவர் அவர்களை பக்குவமாகத் தேற்றி, சுகப்படுத்தி, பெலப்படுத்தி, புதுப்பிக்கிறார். அவர்கள் திருச்சபைக்கு வரும்போது, மனந்திரும்புதல் மற்றும் ஜெபத்தின் மூலம் சுகத்தையும், தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தையினால் சுத்திகரிப்பையும், பரிசுத்த இரகசியங்களில் பங்குகொள்வதன் மூலம் கிருபையையும், கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் ஒன்றிணைந்து வாழ்வதன் மூலம் ஆவிக்குறிய வாழ்வின் அனுபவத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

## திருச்சபை ஒரு பாதுகாப்பான இடம்

நம்மில் எவரும் ஏற்கனவே பரிபூரணமானவர்களாக இருப்பதால் திருச்சபைக்கு வருவதில்லை. மாறாக, நமது கர்த்தர் தாமே, “பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை..” *(பரி.மத்தேயு 9:12)* என்று கூறினார். இந்த காரணத்தினால், அனைத்து குழந்தைகளுக்கும், அனைத்து இளைஞருக்கும், ஏன் அனைவரும் பாதுகாப்பு தேவைப்படுகிறவர்களே, உண்மையில் நமது ஸ்தல திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரும், கண்ணியத்துடன் நடத்தப்பட்டு, எந்தவிதமான தீங்குகளிலிருந்தும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதில் நமது திருச்சபை தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. பாதுகாப்பான திருச்சபை என்பது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்ட ஒரு அமைப்பு மட்டுமல்ல. அது கிறிஸ்துவின் அன்பு, மரியாதை, நேர்மை,

பொறுப்புணர்வு மற்றும் ஒருவர்மீது ஒருவர் கொண்ட உண்மையான அக்கறை ஆகியவை அனைவராலும் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படும் ஒரு சமூகமாகும். நமது ஸ்தல திருச்சபைக்குள் உள்ள ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் ஜனங்களாகிய நம் மூலம் – அதாவது, கிறிஸ்துவின் சரீரமாகிய உங்களாலும் என்னாலும் – கிறிஸ்துவின் இரக்கமுள்ள அரவணைப்பை உணர வேண்டும். அவ்வாறு, நம்முடைய ஒவ்வொருவரின் உதவியும் காயப்பட்டவர்களுக்கு ஆறுதலும், துன்பப்படுவோருக்கு பாதுகாப்பும், நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கையும், அனைவருக்கும் கிறிஸ்துவின் அன்பும் கிடைக்கும் பரிசுத்தமான பாதுகாப்பிடமாக விளங்கட்டும். ஆகையால், பாதுகாப்பை உறுதி செய்வது என்பது வெறுமனே நிர்வாகப் பொறுப்போ அல்லது நிறுவனத்தின் தேவையோ அல்ல. அது தேவனுடைய இயல்பிலேயே வேரூன்றியுள்ள சுவிசேஷக் கடமையாகும். பெலவீனர்களிடம் பொறுமையுடனும், பாவிகளிடம் இரக்கத்துடனும், தம்மிடம் அடைக்கலம் தேடுகிற அனைவரிடமும் பரிவுடனும் இருக்கிற தேவனுடைய குணத்தை அது பிரதிபலிக்கிறது.

இந்த அர்ப்பணிப்பு, ஸ்தல திருச்சபையின் வாழ்வில் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒழுக்க நெறிமுறைகளுக்கான நமது அர்ப்பணிப்பை புதுப்பிப்பதையும் உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு பேராயரும், குருவானவரும், டீக்கன்களும், சுவிசேஷகரும், சிஸ்டர்ஸ் ஆ்ஃப் கிராஸ் சகோதரிகளும், ஊழியத் தலைவரும், தன்னார்வ ஊழியர்களும், திருச்சபையின் ஒவ்வொரு விசுவாசியும், நமது வார்த்தைகள், செயல்கள் மற்றும் உறவுகள் அனைத்தின் மூலமும் கிறிஸ்துவின் குணத்தை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பைப் பகிர்ந்துகொள்கிறோம். நாம் அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம், ஒருவர்மீது ஒருவர் எவ்வாறு அக்கறை செலுத்துகிறோம், மற்றும் நமது நடத்தையை எவ்வாறு அமைத்துக்கொள்கிறோம் என்பவை அனைத்தும், நாம் சேவிக்கும் கர்த்தருக்கு எப்போதும் மகிமையையும் கனத்தையும் செலுத்துவதாக இருக்க வேண்டும்.

## மனந்திரும்புதலுக்கும் மறுஅர்ப்பணிப்பிற்குமான அழைப்பு

பரிசுத்த வேதாகமம் நமக்கு நினைவூட்டுவது என்னவெனில், புதுப்பித்தல் மனந்திரும்புதலிலிருந்தே தொடங்குகிறது என்பதாகும். சங்கீதக்காரன் இவ்வாறு ஜெபிக்கிறார்: "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்."*(சங்கீதம் 51:10)* தெய்வீக ஆராதனை, ஜெபம், உபவாசம் மற்றும் உண்மையுள்ள விசுவாச வாழ்க்கையுடன் ஒரு புதிய ஆண்டிற்குள் நாம் நுழைவதற்கு முன், நாம் ஒவ்வொருவரும் சற்று நேரம் எடுத்துக்கொண்டு நம்மையே கேட்டுக்கொள்வோம்: "நமது ஸ்தல திருச்சபைகள் உண்மையிலேயே தேவனுடைய நித்திய மதிப்புகளையும், தேவனுக்கேற்ற வாழ்க்கை முறையையும் வெளிப்படுத்தும் உயிருள்ள சாட்சிகளாக இருக்கின்றனவா?" நமது வாழ்க்கையின் பரிசுத்தத்திற்கும், ஊழியத்தில் உண்மைத்தன்மைக்கும், நமது பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைவரின் பாதுகாப்பிற்கும், நம்மையும் நமது ஸ்தல திருச்சபையும் சமூகங்களையும் மீண்டும் அர்ப்பணிப்போம்.

இது புதிதாக எதையாவது செய்யும் அழைப்பு அல்ல; மாறாக, நமது அடிப்படையான மற்றும் ஆதாரமான வேர்களுக்குத் திரும்புவதற்கான அழைப்பாகும். நமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து ஆவிக்குரிய வளங்களையும் நாம் முழுமையாகப் பயன்படுத்துவோம் – புதிய ஆண்டிற்கான லெக்ஷ்னரி (Lectionary), திருச்சபையின் நாட்காட்டி, வேதவசனங்கள், உபவாசங்கள் மற்றும் பண்டிகைகள், தர்மம் மற்றும் தானங்கள், மேலும் எளிமையான வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுத்து வாழ்தல் ஆகியவற்றின் மூலம், தனிநபர்களாகவும் ஸ்தல திருச்சபை சமூகங்களாகவும் கிறிஸ்துவுக்குள் வளருவோம். அவ்வாறு வளரும்போது, புரிந்துகொள்ளுதல், பகுத்தறிதல், இரக்கம், மற்றும் நியாயம் தீர்ப்பதற்குப் பதிலாக தேவையான இடங்களில் இரக்கத்தையும் அன்பையும் காட்டுவதற்கான ஆயத்தம் ஆகியவற்றில் நாம் மேலும் ஆழமடைவோம். இந்த வேர்களைத் தொடர்ந்து புதுப்பித்து ஆழப்படுத்துவதன் மூலமே, கிறிஸ்தவ வாழ்க்கையின் நிலைத்தன்மை, நீடித்த தன்மை மற்றும் நிலையான கனியை நாம் உறுதிசெய்கிறோம். ஒவ்வொரு ஸ்தல திருச்சபை கிறிஸ்துவின் பிரசன்னத்தை அனுபவிக்கவும், அந்தப் பிரசன்னத்தைத் தமது வாழ்வின் மூலம் பிரதிபலிக்கவும் கூடிய, மேலும் முழுமையான பாதுகாப்பானதும் பரிசுத்தமானதுமான அடைக்கலமாக மாறட்டும்.

என் அன்பிற்குரிய பிள்ளைகளே, புதிய திருச்சபை ஆண்டிற்காக நாம் ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில், உங்கள் ஒவ்வொருவரையும் நான் எனது ஜெபங்களில் நினைத்துக்கொள்கிறேன். தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நீங்கள் ஏறெடுக்கும் ஜெபங்களில், இந்தப் பெலவீனமும் பாவியுமான ஊழியக்காரனையும் நினைவுகூருங்கள். பரிசுத்த திரித்துவமாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர், தூய்மையான இருதயங்களையும், சேவை செய்வதற்குக் கரங்களையும், கிறிஸ்துவின் அன்பை உண்மையுடன் பிரதிபலிக்கும் பரிசுத்தமான வாழ்க்கையையும் நமக்கு தந்தருளுவாராக. மேலும், பரிசுத்த தேவனின் தாயாகிய தியோடோகோஸ் (Holy Theotokos) மற்றும் அனைத்து பரிசுத்தவான்களின் பரிந்துரைகள், இப்பொழுதும் எப்பொழுதும் நமக்குப் பாதுகாப்பாக இருப்பதாக. ஆமென்!

கிறிஸ்துவில் உங்கள் ஆவிக்குறிய தந்தை



தேதி : 10 செப்டம்பர் 2026

இடம்: வேர்ல்டு சர்ச் ஹெட் குவாட்ரஸ்

மேரான் மோர் சாமுவேல் தியோபிலஸ்
மெட்ரோபாலிட்டன்